முருகப்பெருமான் துணை

**மகான் திருகுறிப்புத் தொண்டர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**07.03.2023**, செவ்வாய்கிழமை

1. அறமாக வந்த வள்ளலே
அண்ணலே ஆறுமுக அரங்கனே
வரம் தந்து உலகை மீட்டிட
வடிவேலனார் அவதாரமாக வந்த ஞானியே
2. ஞானியே உன் பெருமை கூறி
ஞாலமதில் சுபகிருது சால் திங்கள்
இனிமைபட மூவேழீர் திகதி குசன் வாரம்
(சுபகிருது வருடம் மாசி மாதம் 23 ம் நாள், 07.03.2023, செவ்வாய்கிழமை)
இயம்பிடுவேன் அனுகூல ஆசிதனை
3. ஆசிதனை திருகுறிப்புத் தொண்டர்யானும்
அருளுவேன் உலக நலம்பெற
ஆசிதனை வழங்கி மக்களுக்கு
ஆக்கம் தந்து பாதுகாத்தருளும்
4. அருளும் அரங்கன் வாழ் குடிலை
அனுகி மக்கள் அடைந்துமே
அருளுடன் ஞான பலம் வேண்டி
அரங்கனிடம் சிவதீட்சை ஏற்று
5. ஏற்று சுத்த நெறி வழியே
எவ்வுயிர்க்கும் இன்னல்தரா வண்ணம்
ஆற்றல்பட சேவை ஆற்றி
அரங்கனே யாவுமென சரணாகதி
6. சரணாகதி கண்டு வருகவே
சற்குரு அரங்கன் உருவில்
சரவணப்பெருமானை கண்டுமே
சர்வ சூட்சுமமும் அடைந்திடுவர்
7. அடைந்திட ஆற்றல்மிக்க வழி
அரங்கமகான் தருமவழி தான்
தடையின்றி தொடர்வதற்கும்
தருமம் செய்து பழக வேண்டும்
8. வேண்டியே பூசையும் செய்து
விடாது தொடர்ந்து வந்தால்தான்
தொண்டுவழி முழுமை கூடியே
தெய்வநெறியை உள் வாங்கியே
9. ஆகியே ஞானவான் என்கின்ற
ஆற்றல் முழுமை அடைந்து
அகிலம் மாற்றும் சக்திகளாக
அரங்கனும் தேற்றிய ஞானிகள் ஆக

10. ஆகவே உலகமெல்லாம் பெருகி
அகிலத்தில் ஞானத் தலைமை
வகைபட உலகோர்கள் ஏற்க
வல்லமை மிக்க ஞான ஆட்சியாக

11. ஆட்சியாக மாற்றம் காண்கும்
ஆறுமுகனார் அரங்கன் வழி
காட்சி தந்து வழிநடத்தவே
கலியினில் யுகமாற்றம் நிகழும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–